# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6491/A/2024**

திரு.ம.தமிழ்செல்வன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
29/13, பேன்பேட்டை முதல் தெரு,
கால்நடை மருத்துவமனை சாலை,
சைதாப்பேட்டை, சென்னை-35. -- பொது அதிகார அமைப்பு

மேல்முறையீட்டு அலுவலர்/ உதவி
ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தி.நகர் மண்டலம், சென்னை-35.

# ஆணை

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு.ம.தமிழ்செல்வன், நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | திருமதி. ல.அமராவதி,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>மற்றும்<br>திருமதி.இரா.ருக்மணி,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>ஆகியோர் நேரில் ஆஜரானாரகள். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 24.02.2024 |
| மனுதாரர், புதிய குடும்ப அட்டை குறித்த சில தகவல்களை 5 இனங்களில் கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 01.03.2024 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 03.04.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 02.05.2024 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 07.05.2024 |
| விசாரணை அழைப்பாணை நாள் | 02.04.2025 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்களுக்கு உரிய முழுமையான தகவல்களை பெற்றுத்தருமாறு தன் தரப்பு வாதத்தை முன்வைத்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் திருமதி. இரா.ருக்மணி, மேலாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தி.நகர் மண்டலம், சென்னை-35 அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் ந.க.எண்.அ2/583/2024, நாள் 29.03.2024 என்ற கடித்தின் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கியதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், திருமதி.ல.அமராவதி, மேலாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சைதாப்பேட்டை, சென்னை-35 அவர்கள் மனுதாரர் வ.எண்.5-ல் கோரிய தகவலானது இம்மண்டலத்தில் 01.01.2023 முதல் 22.02.2024 வரையிலான காலத்தில் மொத்தம் 1509 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

**4.** மனுதாரரின் தகவல் கோரும் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், **மனுதாரர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர்கள் வழங்கியுள்ளதாக ஆணையம் ஏற்று, இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-6491/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
29/13, பேன்பேட்டை முதல் தெரு,
கால்நடை மருத்துவமனை சாலை,
சைதாப்பேட்டை, சென்னை-35.

மேல்முறையீட்டு அலுவலர்/ உதவி ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தி.நகர் மண்டலம்,
சென்னை-35.

**<u>மனுதாரர்</u>**

திரு.ம.தமிழ்செல்வன்,
த/பெ.பெ.மணிமாறன்,
எண்.21/8, 3-வது அவென்யூ,
அசோக் நகர்,
சென்னை 600 083.

KRM/PA 09.04.2025